ACT-இல் பல்கலாச்சாரத்தை அங்கீகரித்து அதை ஊக்குவிப்பதற்கான புதிய சட்ட முன்மொழிவு



ACT அரசு 2021 ஆம் ஆண்டில் ACT பல்கலாச்சார அங்கீகார சட்டம் என்று அழைக்கப்படும் புதிய சட்டத்தை உருவாக்கப் போகிறது. இப்புதிய சட்டம் ACT-இன் பல்கலாச்சாரம் தொடர்பில் ACT அரசு கொண்டிருக்கும் வலுவான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும்.

இது குறித்த கலந்துரையாடல் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2021 மே மாத தொடக்கத்தில் முடிவடையும்.

கலந்துரையாடலின் நோக்கங்களாவன:

- முன்மொழியப்பட்ட பல்கலாச்சார அங்கீகாரச்சட்டத்தின் முன்னேற்றம் குறித்த சமூக விழிப்புணர்வை அதிகரித்தல்;
- கலாச்சார ரீதியாகவும் மொழியியல் ரீதியாகவும் மாறுபட்ட கன்பராவாசிகளுடன் பணிபுரியும் நிறுவனங்களுக்கு அறிவிப்பதுடன் அவர்களையும் ஈடுபடுத்தல்; மற்றும்
- இச்சட்டத்தின் முன்னேற்றம் குறித்து அனைத்து ACT குடியிருப்பாளர்களின் பார்வை மற்றும் கருத்துக்களை பெறுதல்

புதிய சட்டம் மூன்று முக்கிய கூறுகளை உள்ளடக்கியிருக்கும். ஒரு பல்கலாச்சார சாசனம், ஒரு பல்கலாச்சார ஆலோசனைக் குழு மற்றும் அரசாங்கத்தின் முன்னுரிமை திட்டமிடலை ஆதரிப்பதுடன் அதுதொடர்பில் சமூகத்திற்குத் தெரிவிக்கும் ஒரு கட்டமைப்பு ஆகியவை அடங்கும். இவை கீழே விளக்கப்பட்டுள்ளன.

பல்கலாச்சார சாசனம்

பல்கலாச்சாரக் கொள்கையை ஆதரிக்கத் தேவையான 'முக்கிய நியமங்களை' முன்னிலைப்படுத்தும் ஒரு பல்கலாச்சார சாசனம் உருவாக்கப்படும். எமது ACT சமூகத்திற்குள் பல்கலாச்சாரத்தன்மை முன்னேறுகிறதா என்பதைப் பற்றி மதிப்பீடு செய்வதற்கு, இந்த முக்கிய நியமங்களை அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்கள் பயன்படுத்தலாம்.

பல்கலாச்சார ஆலோசனைக் குழு

புதிய சட்டத்தில் தற்போதைய அமைச்சரால் நியமிக்கப்பட்ட பல்கலாச்சார ஆலோசனைக் குழுவும் அடங்கும். இக்குழுவின் பணி, பல்கலாச்சார விவகாரங்களுக்கான ACT அமைச்சருக்கு பல்வேறு சிக்கல்கள் மற்றும் அம்சங்கள் குறித்து ஆலோசனை வழங்குவதாகும். குழுவின் செயல்பாடுகள் மற்றும் உருவாக்கம் ஆகியவை கலந்துரையாடல் செயல்முறை மூலம் தெரிவிக்கப்படும்.

முன்னுரிமை திட்டமிடல் மற்றும் அறிக்கையிடல் கட்டமைப்பு

முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவற்றைத் திட்டமிடல் மற்றும் ACT சமூகத்திற்கான திட்டங்கள், சேவைகள் மற்றும் கொள்கைகளை உருவாக்குதல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அதை மதிப்பீடு

செய்தல் போன்றவற்றின்போது, புதிய சட்டம் ACT அரசாங்கத்திற்கும் அதன் நிறுவனங்களுக்கும் வழிகாட்டும்.

ந ள த வ ாற ள லாம ற ல தகவல கைள எ க பெறலாம

www.communityservices.act.gov.au/multicultural/multicultural-recognition-ஐப ார வய வ சம ஆலோசனைப ட டைறய லந கால பத சய வ

ஏதேன கள ள ர ால multiculturalaffairs@act.gov.au- க ல அன வ

https://www.yoursay.act.gov.au/multicultural-recognition-act-இல வ ாக காத த ப சய வ

ACT-இல் பல்கலாச்சாரத்தை அங்கீகரித்து அதை ஊக்குவிப்பதற்கான புதிய சட்ட முன்மொழிவு



கலந்துரையாடலுக்கான ACT பல்கலாச்சார சாசன வரைவு

உலகின் மிகப் பெரிய பல்கலாச்சார சமூகங்களில் ஒன்றாக இருப்பதற்கு ACT பாடுபடுகிறது.

எங்கள் முதற்குடிகளை நாங்கள் அங்கீகரிக்கிறோம், மேலும் அவர்களின் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் அவர்கள் ACT மற்றும் பிராந்தியத்திற்கு தொடர்ந்து அளிக்கும் பங்களிப்பை மதிக்கிறோம். நாங்கள் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கிறோம். இந்த நிலம் பூர்வீக நிலம் என்பதை எப்போதும் அங்கீகரிக்கிறோம்.

அனைத்து ACT குடியிருப்பாளர்களையும் நாங்கள் மதிக்கிறோம். ஒருவரைப்பற்றி ஒருவர் கற்றுக்கொள்வதன் மூலமும் நட்புக்கரம் நீட்டுவதன் மூலமும் நம் மனிதநேயத்தைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடையும்வகையில் எங்கள் பிராந்தியத்தை ஒரு இணக்கமான மற்றும் மரியாதைக்குரிய இடமாக மாற்றுவதற்கு நாம் அனைவரும் பங்களிக்க முடியும்.

தனிநபர்களாகவும் கூட்டாகவும், எங்கள் பணியிடங்கள் மற்றும் அமைப்புகளின் ஊடாக, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் மரியாதைக்குரிய ACT சமுதாயத்தை மேம்படுத்துவதில் நம் அனைவருக்கும் பங்கு உண்டு என்பதை நாங்கள் அறிவோம்.

நாம் ஒவ்வொருவரும் பின்வரும் பொதுவான கொள்கைகளை அங்கீகரிக்கிறோம்:

- ஆஸ்திரேலியா மற்றும் ACT க்கான அர்ப்பணிப்பு;
- சட்டம் ஒழுங்குக்கு கட்டுப்படுவதற்கான கடமை;
- கலாச்சாரம், மொழி மற்றும் மத வேறுபாட்டை வெளிப்படுத்தும் சுதந்திரம்;
- பின்னணியைப் பொருட்படுத்தாமல் பரஸ்பர மரியாதை; மற்றும்
- பங்கேற்பதற்கான சம உரிமை

ஒரு பல்கலாச்சார சமூகமாக நாம் தொடர்ந்து பல்கலாச்சாரத்தை பின்வருவனவற்றின் ஊடாக ஆதரிப்போம்:

- பல்கலாச்சார சமூகத்தினர் தமக்கான சேவைகளை அணுகக்கூடியதாகவும் செயற்படக்கூடியதாகவும் மாற்றுதல்;
- சமூகம்சார்ந்த செயற்பாடுகள் மீதான ஈடுபாடு, பங்கேற்பு மற்றும் சமூக ஒத்திசைவை ஊக்குவித்தல்;
- பல்கலாச்சாரத்தன்மையின் நன்மைகளை மூலதனமாக்குதல்;
- எமது அமைப்புகள், முகவர் நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் பல்கலாச்சாரத்தின் தத்துவத்தையும் கலாச்சார பன்முகத்தன்மையின் நன்மைகளையும் தழுவி அவற்றை ஊக்குவிப்பதுடன் வெற்றிபெறுவதற்கு சிறந்த வாய்ப்புகளை உருவாக்குதல்; மற்றும்
- எங்களது சிறந்த நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் தீவிரமாக பங்களிப்பதற்கும் எங்கள் பல் கலாச்சார சமூகங்களுக்கு உதவுதல்.

முக்கிய கேள்விகள்:

1. எங்கள் ACT பல்கலாச்சார சாசனத்தில் என்னென்ன சேர்க்கப்பட வேண்டும்?

2. பூர்வீககுடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு பின்னணிகொண்ட ACT குடியிருப்பாளர்களை உள்ளடக்கிய சாசனம் எவ்வாறு இருக்க வேண்டும்?

3. மேலே குறிப்பிடப்படாத வேறு எந்தக் கொள்கைகளும் ACT சாசனத்தில் சேர்க்கப்பட வேண்டுமா?

4. ஒரு சமூகமாக நாம் என்ன லட்சியம் மற்றும்/ அல்லது அபிலாஷைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்?

ACT-இல் பல்கலாச்சாரத்தை அங்கீகரித்து அதை ஊக்குவிப்பதற்கான புதிய சட்ட முன்மொழிவு



ACT பல்கலாச்சார ஆலோசனைக் குழுவின் சாத்தியமான சட்டரீதியான செயல்பாடுகள்

ACT பல்கலாச்சார ஆலோசனைக் குழு பின்வரும் விடயங்களில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்கும்:

- *ACT இலுள்ள வேறுபட்ட கலாச்சார பின்னணிகளையுடைய கன்பராவாசிகள் சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் குடிமை வாழ்க்கையில் தீவிரமாக பங்கேற்க வாய்ப்புகளை அதிகரிப்பதுடன் அதற்கான தடைகளை குறைப்பதற்கான வழிகள்;*
- *ACT இல் பல்கலாச்சார சமூகங்களுக்கு அரச சேவைகள் வழங்கப்படும் முறையை மேம்படுத்தல்;*
- *ACT இலுள்ள பல்கலாச்சார சமூகங்களின் தேவைகளை தீர்மானிக்க தேவைப்படும் ஆலோசனை;*
- *புலம் பெயர் பின்னணிகொண்ட சமூகங்களின் தேவைகள், குறிப்பாக அகதிகள் மற்றும் புகலிடம் கோருவோரை ACT சமூகத்துடன் ஒருங்கிணைப்பது மற்றும் அவர்களது ஒருங்கிணைவை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை அடையாளம் காண்பது;*
- *ACT மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இணக்கமான சமூக உறவுகளை வளர்ப்பது; மற்றும்*
- *அமைச்சரால் பணிக்கப்பட்ட வேறு ஏதேனும் செயல்பாடுகள்.*

கூடுதலாக பின்வரும் செயற்பாட்டிலும் இக்குழு ஈடுபடும் என முன்மொழியப்பட்டுள்ளது:

- *சமூகத்தின் தேவைகளை தீர்மானிப்பதற்கென சம்பந்தப்பட்ட அமைப்புகள் மற்றும் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்தல்.*

முக்கிய கேள்வி:

1. *பல்கலாச்சார ஆலோசனைக் குழுவின் செயல்பாடுகள் என்னவாக இருக்க வேண்டும்?*

ACT-இல் பல்கலாச்சாரத்தை அங்கீகரித்து அதை ஊக்குவிப்பதற்கான புதிய சட்ட முன்மொழிவு



ACT பல்கலாச்சார ஆலோசனைக் குழுவின் சாத்தியமான உருவாக்கம்

- 9 முதல் 11 உறுப்பினர்களை இக்குழு கொண்டிருக்கும்
- உறுப்பினர்களுக்கான நியமன காலம் 3 ஆண்டுகள்
- ஒவ்வொரு 18 மாதங்களுக்கும் உறுப்பினர்களில் பாதி பேர் புதுப்பிக்கப்படும்வகையில் நியமனங்களை மாற்றுதல்
- குழு உறுப்பினர்கள் தொடர்ச்சியாக 2 தவணைக்கு மேல் சேவையிலிருக்கக்கூடாது
- தலைவர் மற்றும் துணைத் தலைவருக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும், இவர்களுக்கான ஊதியம் ACT ஊதிய தீர்ப்பாயத்தால் நிர்ணயிக்கப்படும்
- இயங்க ஆரம்பித்து 5 ஆண்டுகளுக்குப் பிறகு சட்டம் மீளாய்வு செய்யப்படும்
- குழுவின் அங்கத்துவ நியமம் அமைச்சரால் கோடிட்டுக் காட்டப்பட வேண்டும். வெவ்வேறுபட்ட கலாச்சார பின்னணி, பாலினம், வயது மற்றும் சமகால பிரச்சினைகளில் நிபுணத்துவம் வாய்ந்த நபர்கள் போன்ற பலதரப்பினர் அடங்கியதாக இருக்கவேண்டுமென அமைச்சர் கருதுகிறார். பின்வரும் பகுதிகளில் நிபுணத்துவம் வாய்ந்த பிரதிநிதிகளை அமைச்சர் பரிசீலிக்கலாம்:

  - வளர்ந்து வரும் சமூகங்கள்
  - புலம்பெயர்தோர் குடியமர்வு
  - சமூகம் மற்றும் இன உறவுகள்
  - மொழி சேவைகள்
  - மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் மொழிபெயர்த்துரைப்பாளர்கள்
  - தலைமைத்துவம்
  - வர்த்தகம்
  - சமூக மொழி பள்ளிகள்
  - சமூக மேம்பாடு
  - சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள்
  - மத குழுக்கள்
  - இளைஞர்கள்
  - கலை மற்றும் பண்பாடு
  - வெவ்வேறு தலைமுறையினர் மற்றும் பல இனங்களைச் சார்ந்தோர்

முக்கிய கேள்விகள்:

1. பல்கலாச்சார ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கான நியமனக்காலம் என்னவாக இருக்க வேண்டும்?

2. குழு உறுப்பினர் ஒருவர் பணியாற்றக்கூடிய அதிகபட்ச தவணைகள் அல்லது ஆண்டுகள் என்னவாக இருக்க வேண்டும்?

3. பல்கலாச்சார ஆலோசனைக் குழு கூட்டங்களின் சுருக்கம் அந்த கூட்டங்களைத் தொடர்ந்து பகிரங்கமாகக் வெளியிடப்பட வேண்டுமா?

4. குழு உருவாக்கத்தில் எந்த நிபுணத்துவத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்?

5. ACT இல் பல்கலாச்சார ஆலோசனைக் குழுவுக்கான நிர்வாகத்தை உருவாக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய வேறு ஏதேனும் விடயங்கள் உள்ளனவா?

ACT-இல் பல்கலாச்சாரத்தை அங்கீகரித்து அதை ஊக்குவிப்பதற்கான புதிய சட்ட முன்மொழிவு



அணுகுமுறை

ACT அரசாங்கம் அதன் தகவல்கள், சேவைகள், நிகழ்வுகள் மற்றும் இடங்களை முடிந்தவரை பலருக்கும் அணுகக்கூடியதாக மாற்ற உறுதிபூண்டுள்ளது.

அச்சிடப்பட்ட ஆவணத்தைப் படிக்க உங்களுக்கு சிரமம் இருந்தால், பெரிதாக அச்சிடப்பட்ட அல்லது ஒலி போன்ற ***மாற்று வடிவத்தில்*** *இந்த வெளியீட்டைப் பெற விரும்பினால் - தயவுசெய்து* ***(02) 6205 0282*** *என்ற எண்ணை அழையுங்கள்.*

ஆங்கிலம் உங்கள் முதல் மொழி இல்லையென்றால், ***மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவைகள்*** *உங்களுக்குத் தேவைப்பட்டால், தயவுசெய்து* ***131 450*** *என்ற எண்ணை அழையுங்கள்.*

நீங்கள் செவிப்புலனற்றவர் அல்லது கேட்டல் குறைபாடு உள்ளவர் என்பதுடன் உங்களுக்கு ***National Relay Service*** *தேவைப்பட்டால்,* ***133 677 என்ற எண்ணை அழைத்து பின்னர் 133 427 ஐக் கேட்கவும்***